கூட்டம் எண் – 02/2023

ஆரணி நகராட்சி,
நாள்:25.08.2023

சாதாரணக்கூட்டம் அறிவிப்பு

31.08.2023 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நகர மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள சாதாரணக்கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர மன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.

திருக்குறள்

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

(அதிகாரம் 8–75)

பொருள்கள்

1. நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் –2023 மாதக் குறிப்பு
அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

2. நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் –2023 மாதக் குறிப்பு
அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

3. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள்,துணை மேயர்கள், மன்ற தலைவர்கள், மன்ற துணைத்தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதம்தோறும் மதிப்பூதியம் வழங்கும் பொருட்டு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)துறையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்)துறை, நாள்.13.07.2023–ன் அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.433/2022/இ1)

அலுவலக குறிப்பு:1.மன்றம் பதிவு செய்யலாம். 2.மேல்நடவடிக்கை தொடர மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

4. ஆரணி நகராட்சியின் 2022–2023 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண்.1007/2014/சி1)

5. ஆரணி நகராட்சி ஆணையாளர், பொறியாளர் மற்றும் நகரமன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் 3 வாகனங்களுக்கு வருடாந்திர இன்சூரன்ஸ் புதுப்பித்தல் மற்றும் வாகனங்கள் பழுது சரி செய்வதற்காக ஓராண்டிற்கான (01.04.2023 முதல் 31.03.2024 வரை) தோராய செலவித்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம். அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று TN25–AU 6961 ற்கான வருடாந்திர இன்சூரன்ஸ் புதுப்பித்தல் தொகை ரூ.15339/– மற்றும் TN97C 5499 வாகனத்திற்கான பழுது சரிசெய்தலுக்கான தொகை ரூ.17749/– ஐ யும் வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண்.1320/இ1/2023)

6. ஆரணி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT)2022–2023 இன் கீழ் புதிய அறிவுசார் மையம் அமைக்க அரசாணை நிலை எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (கு.வ) நாள்:17.06.2022–ல் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியின் பேரில் 15.07.2022ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு இப்பணியினை செய்திட ஒப்பந்ததாரர் திரு.S.ஜெகன்மோகன் அவர்களுக்கு கடந்த 29.07.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. இதனிடையே இப்பணிக்கு ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட வார்டு எண்:10 கைலாசநாதர் கோவில் அருகில் கட்டுமானம் செய்திட திட்டமிடப்பட்ட இடத்தில கட்டிடப்பணியினை மேற்கொள்ளாமல் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அதிகம் பயன்பெறும் வண்ணம் இந்நகராட்சி அலுவலகம் அருகே வார்டு சி, பிளாக் 6, நகரளவு எண்.2–ல் 1184 ச.மீ பரப்பளவில் பள்ளிக்கல்வித்துறைக்கு சொந்தமான இடத்தில் இப்பணியை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.73, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை (நிலமுடிவு அலகு 4(1), நாள்: 15.02.2023–ல் உத்தரவிட்டதின் பேரில் இப்பணியினை மாற்று இடத்தில் செய்திட ஏற்கனவே ஒப்பந்தம் எடுத்திட்ட திரு.S.ஜெகன்மோகன், ஆரணி ஒப்பந்ததாரருக்கு 27.02.2023–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. இப்பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போது சரக்கு மற்றும் சேவை வரி 12% என இருந்த நிலையில் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. GST மன்றத்தின் 47வது கூட்ட நடவடிக்கையானது கடந்த ஜூன் 28, 29 –2022–ல் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்கனவே ஒப்பந்த பணிகளுக்கு வழங்கப்பட்ட 12% GST தொகையினை 18% மாக உயர்த்தி அறிவிக்கப்பட்டது.உயர்த்தப்பட்ட இவ்வறிவிப்பு 18.07.2022 முதல் செல்லுபடியாகும் என தெரிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே இவ்வுத்தரவு அடிப்படையில் 12% GST தொகையினை 18% தொகையாக மாற்றி வழங்கிட சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

இதுகுறித்து பொதுப்பணித்துறையின் முதன்மை பொறியாளர், சென்னை அவர்களின் கடித சுற்றிக்கை எண். HDO/A/GST, 2022 நாள்:31.10.2022 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி கூடுதல் GST 6% –னை வழக்கிட கீழ்கண்ட விவரப்படி நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண். KNMT 2022–2023, மதிப்பீடு தொகை ரூ.188.25 இலட்சம், நாள்:24.06.2022–ல் வழங்கப்பட்ட மதிப்பீட்டு தொகையில் வழங்கப்பட்ட GST 12% தொகையின் விவரம்.

| | | |
|---|---|---|
| இனங்களின் கூட்டு தொகை | – | ரூ.16394647.62 |
| GST12% | – | ரூ. 1967357.71 |
| GST18% | – | ரூ. 2951036.57 |
| GST12% க்கும் GST18% ற்கும் உள்ள வித்தியாச தொகை | – | ரூ. 983679.00 |

மேற்கண்ட வித்தியாச தொகையினை (ரூ.983679/–) திட்ட நிதியிலிருந்து செலவிட இயலாது என்பதால் கூடுதல் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண். 535/2022/இ1)

7. 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023–24 (Untied Grant) கீழ் ஆரணி நகராட்சியில் ஏற்கனவே உள்ள எரிவாயு தகன மேடையினை நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 கடிதம் ந.க.எண்: 16491/2023/CFC–1, நாள்: 06.06.2023 அவர்களிடமிருந்து அனுமதி வழங்கி வரப்பெற்றதை தொடர்ந்து 23.06.2023 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சியில் ஏற்கனவே உள்ள எரிவாயு தகன மேடையினை நவீனப்படுத்தும் பணி. | 60.50 | M/s. MHT Engineering, Chennai–32.<br><br>M/s. Yes Yes Jee Engineering, Chennai–23. | மதிப்பீட்டை விட 0.04% குறைவு<br>மதிப்பீட்டை விட 3.10% அதிகம் |

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட 0.04% குறைவாக வழங்கியுள்ள M/s. MHT Engineering, Chennai–600 032. நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.(கோப்பு எண். 589/2023/இ1)

8. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்களின் கடிதம் ந.க.எண். /அ3/2013 நாள். 26.05.2023 மற்றும் 12.07.2023ல் தெரிவித்துள்ளவாறு ஆரணி நகராட்சி பகுதியில் டெங்கு நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி தெளித்தல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 21.08.2023 முதல் 15.11.2023 வரை மூன்று மாதங்களுக்கு மல்லிகை சுய உதவிக்குழு ஆரணிக்கு 60 பேர் வீதம் சப்ளை செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை

அவர்கள் நிர்ணயித்த தினசரி கூலி ரூ. 417/– என்ற அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு.1.மன்றம் அனுமதிக்கலாம்.2.மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.3.அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண். 538/2020/எச்1)

9. ஆரணி நகராட்சி பகுதியில் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக அறிவிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னையிலிருந்து ODF Team 03.07.2023 முதல் 06.07.2023ந் தேதி வரை ஆய்வு மேற்கொண்டதற்கு 8 சமுதாய கழிப்பறைகள் 2 பொது கழிப்பறைகள் ஆகியவற்றில் குடிநீர்வசதி, மின்விளக்கு வசதி, குழய்கள் ஆகியவை பழுதடைந்து உள்ளதை சரி செய்தது. மேலும் Washbasin, கண்ணாடி, டவல் வாங்கியது மற்றும் செப்டிக் டேங்க் சுத்தம் செய்தது. பிளாஸ்டிக் பக்கெட் வாங்கியது, Sticker ஒட்டியது போன்ற செலவினங்கள் மேற்கொண்டதற்கு R. நேரு ஒப்பந்ததாரருக்கு ரூ. 1,63,850/–யை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு.1.மன்றம் அனுமதிக்கலாம்.2.அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண். 2201/2022/எச்1)

10. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தினக்கூலி பணியாளர் A.சங்கீதா என்பவர் பணி நிரந்தரம் செய்ய கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடந்தார் W.P.No.3953 Of 2023 அவை 13.02.2023ல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன.மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் லூர்து பால் மவுரியா என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு.1.மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண். 196/2023/எச்1)

11. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணியாளராக பணி புரிந்து வந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2023 அன்று பணி ஓய்வு பெற்ற திருமதி.வே.மலர்க்கொடி என்பவருக்கு கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | சிறப்பு சேமநிலை நிதி அசல் | ரூ. 2960.00 |
| 2) | அசல்கான வட்டி தொகை | ரூ.26528.00 |
| 3) | நிர்வாக பங்கு தொகை | ரூ. 10000.00 |
| | ஆகமொத்தம் | ரூ.39488.00/–ஐ |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண். 1315/2023/பி2)

12. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணியாளராக பணி புரிந்து வந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2023 அன்று பணி ஓய்வு பெற்ற திரு.எம்.சுந்தர மூர்த்தி என்பவருக்கு கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | சிறப்பு சேமநிலை நிதி அசல் | ரூ. 2960.00 |
| 2) | அசல்கான வட்டி தொகை | ரூ.16455.00 |
| 3) | நிர்வாக பங்கு தொகை | ரூ. 10000.00 |
| | ஆகமொத்தம் | ரூ.29415.00/-ஐ |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண். 1376/2023/பி2)

13. இந்நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணி புரிந்து வரும் திரு.சு.ராமன் என்பவருக்கு புதியதாக இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க அரசாணை எண்.27 நிதி (சம்பளம்) துறை நாள்:20.01.2021 ன் படி முன்பணமாக தொகை ரூ.98700/-ஐ வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண். 1258/2023/பி2)

14. ஆரணி நகராட்சி எல்லைகுட்பட்ட வார்டு C, பிளாக் 4, நகரளவை எண். 41 ல் அமைந்துள்ள 1044 ச.மீ. இடம் நகரளவை "அ" பதிவேட்டின்படி ஆரணி முனிசிப் கவுன்சில் என்ற வகைப்பாட்டில் உள்ள இடத்தில ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக ஆரணி மாவட்ட உரிமையியல் அசல் நீதிமன்ற வழக்கு எண்.O.S.No 27/2001 ல் I A No.13/2019 ல் நகராட்சிக்கு எதிராக தீர்ப்பு வரப்பெற்றதை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தொடர்ந்து ஆரணி நகராட்சி சார்பாக ஆஜராகி வாதிடவும், வழக்கை நடத்தி கொடுக்கவும் திரு.P. சீனிவாஸ், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களிடமிருந்து கட்டணமாக ரூபாய் 25,000/- செலுத்த கோரி இரசீது வரப்பெற்றுள்ளது. மேற்காணும் வழக்கறிஞருக்காக, வழக்கறிஞர் கட்டணம் ரூபாய் 25,000/- செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண். 1090/2023/எப்1)

15. ஆரணி நகராட்சி எல்லைகுட்பட்ட வார்டு C, பிளாக் எண்.6, நகரளவு எண்.7/1ல் காந்தி நகர் சுடுகாடு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.S.A No.1210/2001 உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து. புது டெல்லி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண். SPL No.6404/2023 ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கில் ஆரணி நகராட்சி சார்பாக உச்சநீதி மன்ற வழக்கறிஞர் திரு. பாலசந்திரன் அவர்கள் ஆஜராக உள்ளதால் வழக்கறிஞர் கட்டணம் ரூபாய் 75,000/- செலுத்த கோரி இரசீது வரப்பெற்றுள்ளது. மேற்காணும் வழக்கறிஞருக்காக, வழக்கறிஞர் கட்டணம் ரூபாய் 75,000/- செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண். 9888/2023/எப்1)

நகர மன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
ஆரணி.
நாள்:25.08.2023